1980 பிப்ரவரி 6]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே முன்பிருந்த அரசு 1972 ஆம் ஆண்டிலே, 1973 ஆம் ஆண்டிலே பாக்கியிருந்ததால், அதன்மீது ஒரு முடிவெடுத்திருக்கிறார்கள். இதற்குக் காரணம் மின்கட்டணத்தை அங்கிருந்தவர்கள் சரியாகக் கொடுக்கவில்லை வேண்டுமானால், தாங்களாகவே வைத்துக் கொள்ளலாம் என்று முடிவெடுத்திருக்கிறார்கள். அதை மீண்டும் பரிசீலனை செய்வது பற்றி அரசு ஆலோசனை செய்யும்.

தூத்துக்குடி துறைமுகம்.

*வினா எண் 73— திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தூத்துக்குடி துறைமுக மேம்பாடு குறித்து தூத்துக்குடி துறைமுகக் குழுமத்திற்குப் பரிந்துரை ஏதும் செய்யப்பட்டுள்ளதா?

திரு. ப.கோ.கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்): இல்லை.

திரு. ந. தனசேகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி துறைமுக வளர்ச்சிக்காக தமிழக அரசுக்கு ஏதாவது குழு ஒன்றினை அமைக்கும் உத்தேசம் இருக்கிறதா? அப்படி உத்தேசம் இருந்தால், அது எந்த நிலையில் இருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, ஒரு குழு தமிழக அரசால் அமைக்கப் பட்டிருக்கிறது. தூத்துக்குடியிலுள்ள பழைய துறைமுகம் 1–4–79 முதல், புதிய துறைமுகத்தோடு ஒன்றாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. அப்படிச் சேர்க்கப்பட்ட துறைமுகம் மத்திய அரசின் கட்டுப்பாட்டின கீழ் வந்துள்ளது. தூத்துக்குடி துறைமுக மேம்பாடு குறித்து மாநில அரசு, தலைமைச் செயலாளரின் தலைமையில் பதினாறு உறுப்பினர்கள் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்றை அமைத்துள்ளது. அக் குழுவில், உள்ளூர் இந்திய வணிக தொழில் வர்த்தக சபை, தூத்துக்குடி தொழில் வளர்ச்சிசங்கம், தமிழ்நாடு மின்வாரியம், தென் ரயில்வே ஆகியவற்றின் பிரதிநிதிகள் உறுப்பினர்களாக உள்ளனர். இதுவரை, தூத்துக்குடியில் மூன்று கூட்டங்கள் நடைபெற்றன. பல பொருள்கள் பற்றி விவாதிக்கப்பட்டு இருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறைமுக மேம்பாடு குறித்து ஒரு குழு அமைக்கப் பட்டிருப்பதாக அமைச்சர் செயலர் அவர்கள் சொன்னார்கள்.

அந்தக் குழு பல்வேறு பொருள்கள் பற்றி விவாதித்ததாகவும் சொன்னார்கள். என்னென்ன பற்றி பரிசீலனை செய்திருக்கிறது? இதுசம்பந்தமாக மத்திய அரசினுடைய பரிந்துரையை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு துரிதமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றனவா? அப்படியில்லை என்றால், உடனடியாக தூத்துக்குடி துறைமுகத்தின் அபிவிருத்திக்காக நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உயர்மட்டக் குழு பல்வேறு பரிந்துறைகளை மத்திய அரசுக்குச் செய்திருக்கிறது. அதிலே முக்கியமானவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

1. சில பொருட்களுக்குச் சுங்கவரியைக் குறைத்தல்.

2. பருத்தி நூல், பருத்தித் துணிகள் ஏற்றுமதி.

3. துறைமுகத்தின் முகப்பிலுள்ள கால்வாயை ஆழப்படுத்தல்.

4. ஜிப்சம் ஏற்றுமதி.

5. தூத்துக்குடியைத் துறைமுகப் பகுதியுடன் இணைப்பதற்கு ரயில் பாதை அமைத்தல்.

6. தூத்துக்குடியில் எண்ணெய் சுத்தகரிப்பு ஆலை அமைத்தல்.

7. துறைமுகத்தில் நிலக்கரி இறக்குதல்.

8. கப்பல் எரிபொருள் அறை வசதி.

9. இரயில் நிலையம் ஒன்று அமைத்தல்.

10. விமான தளத்திற்கான இட அமைவு.

11. டீசல் லோகமோடிவ் என்ஜின்களை வாங்குதல்.

12. உப்பைக் கப்பலில் ஏற்றுவதற்கான நவீன வசதிகள்.

இதுபோன்று பல்வேறு வகையான பரிந்துரைகளைப் பற்றி விவாதித்து, மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறது.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, தூத்துக்குடி துறைமுக மேம்பாட்டிற்கு இதுவரை எவ்வளவு செலவு செய்யப்பட்டுள்ளது ? அப்படிச் செலவு செய்யப்பட்டிருந்தால், எந்தெந்த வகையில் அந்தத்தொகை செலவு செய்யப்பட்டிருக்கிறது என்பதையும், இன்னும் செலவு செய்ய திட்டமிடப்பட்டிருக்கின்ற தொகை எவ்வளவு என்பதையும் அறிவிக்க இயலுமா ?

1980 பிப்ரவரி 6]

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, செலவுபற்றிய குறிப்பு தற்போது கைவசம் இல்லை.

திரு. ந. தனசேகரன்; பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் செயலர் அவர்கள் பதிலில் அங்கு ஒரு குழு அமைக்கப் பட்டதாகவும், அது பல நேரங்களில் கூடி பல முடிவுகளை எடுத்ததாகவும் சொன்னார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட மக்கள் பிரதிநிதியாக இருக்கக்கூடிய ஒரே சட்டமன்ற உறுப்பினர்கூட அந்தக் குழுவில் இடம் பெறவில்லை. அந்தக் குறையைப் போக்குவதற்கு, அரசு முயற்சி செய்ய முன்வருமா ?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்); தலைவர் அவர்களே, அந்தக் குழுவிலே அரசு சம்பந்தப்பட்ட அதிகாரிகள்தான் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதிகாரிகள் தவிர வர்த்தகத் துறை பிரமுகர்களும் இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை பரிசீலிக்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலம் திருச்சிராப்பள்ளி பேருந்து வழித்தடம்.

*வினா எண். 74— திரு. கா. செங்கோடன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சேலத்திற்கும் திருச்சிக்குமிடையே இரவு நேரங்களில் செல்லும் பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் உத்தேசம் உண்டா ?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): ஆம்.

திரு. கா. செங்கோடன்: சேலத்திலிருந்து திருச்சிக்கு குறிப் பாக இரவு 8 மணியிலிருந்து 10 மணி வரையில் அரசு பஸ்கள் இல்லை. இதனால் அங்கு பயணிகள் பெரும் அவதிக்குள்ளாகி இருக்கிறார்கள். ஆகவே, இரவு 8 மணியிலிருந்து 10 மணி வரை அதிக பஸ்கள் விட முன்வருவார்களா ?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): ஏற்கெனவே சேலத்திலிருந்து திருச்சிக்கு மூன்று இரவு நேர பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன. அண்ணா போக்கு வரத்துக் கழகம் அதை நடத்தி வருகிறது. மேலும் இரண்டு பேருந்துகளை சேலத்திலிருந்து திருச்சிக்கு விட ஏற்பாடு நடந்து வருகிறது.